உ

கடவுள் துணை.

கலியுகச் சிந்து.

குயப்பேட்டை

வீ. ராஜுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

சென்னை.

வித்யாரத்நாகர அச்சுக்கூடத்திற்

ப்திப்பிக்கப்பட்டது.

1923.

20

கலியுகச்சிந்து.

நாதநாமக்கிரியை-பல்லவி.

காலத்தைபாராய் கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக் கேளாய்.

அநுபல்லவி.

காலத்தின் கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயய்யோயேழைகள் புழுவாய் துடிக்குது
வரியெல்லாம்தலைக்குமேல் வாரண்டாய்திரியுது
வாங்கினகடனுந்தான் கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள்-ஆடி ஆவணிகூட
பொளக்குதே வெய்யல்
நாட்டுப்புரங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்பரக்குது
காடுமேடுகளெல்லாம் கடடுதிட்டமாச்சு
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்போச்சி கா
மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சு
மாடுஆடுகள்பேச்சி பில்லுக்கலையலாச்சி
தரையும்ஒணந்துபோச்சி தண்ணிப்பந்நீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுபோச்சி-தாயார்தமக்கைபோலே
பெண்தேடலாச்சி

கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் கார்த்துயிருக்கலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சி
சொல்லுமிங்கிலீசுக்கு நல்லப்பிழைப்பாச்சி கா
காட்டிலமழையாச்சி கழனிவொணந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலை யிரப்பில்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம்பொரியாய்பொஞ்சிபோச்சி
பிள்ளைகுட்டிகளெல்லாங் கஞ்சிக்கலையலாச்சி
மண்மாரியாச்சி-நாட்டுப்புரங்களெல்லாம்
மண்மாரியாச்சி

யிருந்தவிரைகளெல்லாம் யேளேவிரைத்தமென்று
யிரவும்பகலுமாக முரையிட்டிருக்கும்போது
எடுவெடுவாயிதா பிடிபிடி ஆளென்று
ஏழெட்டுபேராக வீட்டைவளைத்துகொண்டு
ஜப்திகளாச்சி-ஆடுமாடுகளெல்லாம்
யேலமாய்போச்சி

வீட்டுவரிவந்து வாசக்கால்தூக்குது
வேபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைபிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி-தட்டுமுட்டுகளெல்லாம்
வியாபாரமாச்சி

களிதின்றுபிழைக்கவும் கேவுறுமொரைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது

கூலிக்கிபோனாலும் லஞ்சங்கள்கேழ்க்குது
குடுத்தாலும்காலாளுள் அடித்துத்துரத்துது
சீமைசீட்டிகளெல்லாம் சிரிப்பாய்சிரிச்சிபோச்சி
சமுசாரி தாசியும் வேஷம்ஒன்றாய்ப்போச்சி
பெருமையாய்பிழைத்தவர் பொழப்புக்குயிழுப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேல்காசியாச்சி
கடைகெட்டுப்போச்சி-சருவகுலங்களும்
நடைதப்பிபோச்சி

அந்தணர்குலத்துடன் ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பரணைமேல்தூங்குது
பணமென்றால்பிணங்கூட வாய்கொஞ்சந்திரக்குது
பாசுபண்ணவர்பேச்சி வேலைக்கிதொங்குது
தாபொப்பிவந்தாலும் சேயன்யிசையலாச்சி
தம்பித்தமயன்பெண்டை தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் வெங்கும்பெருத்துபோச்சி
நாயகன்தம்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுணைகெட்டுபோச்சி பணமேபெருமையாச்சி
ஜாதிகள்போச்சி

பலத்தைஉத்தியோகத்தை பார்க்கமனைவியாச்சி
படுத்துயிருக்கும்போது அடுத்துப்போகலாச்சி
கலங்கிவேசியரெல்லாங் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவியை விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி தகப்பன்பிள்ளையுங்கூட
வழக்காடலாச்சி

பூமியில்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சி
பூரணமாய்செஞ்சாதம் அடித்துமயங்கலாச்சி
சாமியென்றவருக்குப் பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைப்பூசவும் தெரியாதவர்க்குச்சீச்சீ
கடுகெடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தகடன்கேட்டால் கோட்டைகாட்டலாச்சு
கொஞ்சம்யேமாந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி

அஞ்சாமல்போச்சி பெரியோர் சிறியோரென்ற
அளவெல்லாம்போச்சி

அருத்தமுண்டைகள்பிள்ளை பெத்துவளர்க்கலாச்சு
அப்பனையேமாந்தாக்கால் தாயைப்புணரலாச்சு
திருட்டுப்பிள்ளைகள்பெற்று முறித்துயெறியலாச்சு
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்திலொன்றாச்சு
கட்டிக்கொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சு
கட்டினமூன்றானாள் பெத்துமுரிக்கலாச்சு
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுபோச்சு
மாதாபிதாப்பேச்சு தலையைகுனியலாச்சு

அதிகமாய்போச்சி குடிசெட்டிமுண்டைகள்
அணியணியாச்சியிப்போ

பெண்கள்வியாபாரம் செய்துபிழைக்கலாச்சு
புருஷன்வெளுக்கக்கட்டி பினத்திதிரிபலாச்சு
சண்டைசாடிகளெல்லாம் பணத்தையிரைக்கலாச்சு
சாமிக்குகொடுப்பவர் பூமியில்மருந்தாச்சு

பஞ்சாங்கம்படிப்பெல்லாம் பஞ்சாய்பரந்துபோச்சு
பரச்சிக்குப்பணந்தந்து தெம்பாய்புணரலாச்சு
அஞ்சாமல்பரசோத்தில் அந்தணர்விழலாச்சு
அவர்கள் மனைவியெல்லாம் அழுதுபுலம்பலாச்சு

குலங்கெட்டுப்போச்சி-அந்தணருமேலேயே
குடிகெட்டுபோச்சு

துரைக்குபிறந்தவன்போல் டொப்பிசட்டைகளாச்சு
சோடும்செருப்பும்போச்சி பூரிசுதூக்கலாச்சு
அடுப்புங்கரையில்கூட யிங்கிலீஷ்பேசலாச்சு
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சு
சீமைதுரைகளெல்லாம் காவியுடுத்தலாச்சி
சாதிதமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சு
காலம்தலைகீழாச்சு கருப்புங்குடியாய்போச்சு
கண்டவிடங்களெல்லாம் பைபில்யிரக்கலாச்சு

வேதங்கள்போச்சி கிருஸ்தவர்கூச்சலே
வேடிக்கையாச்சு

கோவில்குளங்களெல்லாம் குட்டிச்சுவராய்போச்சு
குடியதிகமாச்சி கடைகள்பெறுத்துபோச்சு
கிருமதேவிகளெல்லாம் கடையாய்பரந்துபோச்சு
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சு
கலியுகநடத்தைக்கு கடவுளும்சிரிக்குது
காலத்துக்கேத்தாப்போல் மாரிகள்வருகுது
குளிருகாச்சலில்பாதி கூண்டோடேசாய்க்குது
குனிந்துயெழுந்தபேரை வாந்தியில்மடக்குது

பேதியில்பாதி-யிப்படிமடிஞ்சியும்
துள்ளுதேகூவிஜயோ

யின்றைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த ஊர்க்குந்தெரியுமிது
யேனோகெருவங்கொண்டு வீணுகமடியுது
யெண்ணிப்பார்த்தானதில் ஆயிரம்சாயுது
பணங்கையில்வருதென்று பொய்சாட்சிசொல்லாதே
பரிதேசியேழைமேல் புலிபோலத்துள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனல் சீச்சீபிணமாச்சே

கெருவங்கொள்ளாதே நிலையில்லாகழுதேநீ
கெட்டுப்போகாதே

ஊத்தஉடலைநம்பி ஓதிபோலேநிகளாதே
ஊரைபகைத்துகொண்டு வேருடன்மாளாதே
காத்தைமலைத்துகொண்டு கறுமங்கள்தேடாதே
கலியுகசிந்தைநீ பழுதாகசொல்லாதே-கால

கும்மிப்பாட்டுகள்.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யும்காலம்
அப்பனைப்பிள்ளை யுதைக்கும்காலம்
பண்ணினநன்றி மரக்கும்காலம் பழி
பாவத்துக்கஞ்சாகலிகாலம்
புருஷனைப்பெண்டீ றுதைக்கும்காலம்-பெற்ற
பெண்ணைதகப்பன் பார்க்கும்காலம்

பஞ்சாங்கம்படிப்பெல்லாம்	பஞ்சாய்பரந்துபோச்சு
பரச்சிக்குப்பணந்தந்து	தெம்பாய்புணரலாச்சு
அஞ்சாமல்பரசோத்தில்	அந்தணர்விழலாச்சு
அவர்கள்மனைவியெல்லாம்	அழுதுபுலம்பலாச்சு

குலங்கெட்டுப்போச்சி-அந்தணருலேயே
குடிகெட்டுப்போச்சு

துரைக்குபிரந்தவன்போல்	டொப்பிசட்டைகளாச்சு
சோடும்செருப்பும்போச்சி	பூரிசுதூக்கலாச்சு
அடுப்புங்கரையில்கூட	யிங்கிலீஷ்பேசலாச்சு
ஐயமார்குடிக்கவே	அடிக்கொருகடையாச்சு
சீமைதுரைகளெல்லாம்	காவியுடுத்தலாச்சி
சாதிதமிழரெல்லாம்	சட்டைமாட்டலாச்சு
காலம்தலைகீழாச்சு	கருப்புங்குடியாய்போச்சு
கண்டவிடங்களெல்லாம்	பைபில்யிரக்கலாச்சு

வேதங்கள்போச்சி கிருஸ்தவர்கூச்சலே
வேடிக்கையாச்சு

கோவில்குளங்களெல்லாம்	குட்டிச்சுவராய்போச்சு
குடியர்திகமாச்சி	கடைகள்பெறுத்துபோச்சு
கிருமதேவிகளெல்லாம்	கடையாய்பரந்துபோச்சு
கண்டவிடத்தில்வாந்தி	பேதியதிகமாச்சு
கலியுகநடத்தைக்கு	கடவுளும்சிரிக்குது
காலத்துக்கேத்தாப்போல்	மாரிகள்வருகுது
குளிருகாச்சலில்பாதி	கூண்டோடேசாய்க்குது
குனிந்துயெழுந்தபேரை	வாந்தியில்மடக்குது

பேதியில்பாதி-யிப்படிமடிஞ்சியும்
துள்ளுதேகூவிஜயோ

யின்றைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த ஊர்க்குந்தெரியுமிது
யேனேகெருவங்கொண்டு வீணுகமடியுது
யெண்ணிப்பார்த்தானதில் ஆயிரம்சாயுது
பணங்கையில்வருதென்று பொய்சாட்சிசொல்லாதே
பரிதேசியேழைமேல் புலிபோலத்துள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனல் சீச்சீபிணமாச்சே

கெருவங்கொள்ளாதே நிலையில்லாகழுதேநீ
கெட்டுப்போகாதே

ஊத்தஉடலைநம்பி ஓதிபோலேங்களாதே
ஊரைபகைத்துகொண்டு வேருடன்மாளாதே
காத்தைமலைத்துகொண்டு கறுமங்கள்தேடாதே
கலியுகசிந்தைநீ பழுதாகசொல்லாதே-கால

கும்மிப்பாட்டுகள்.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யும்காலம்
அப்பனைப்பிள்ளை யுதைக்கும்காலம்
பண்ணினநன்றி மரக்கும்காலம் பழி
பாவத்துக்கஞ்சாகலிகாலம்
புருஷனைப்பெண்டீ றுதைக்கும்காலம்-பெற்ற
பெண்ணைதகப்பன் பார்க்கும்காலம்

தறுமநெறியை மரங்குங்காலம்-கெட்ட
தறுதலைக்கேத்தகலிகாலம் ௨
தங்கையை அண்ணன் பார்க்கும்காலம் ஐபா
தாயைப்பொலிந்து மடிந்தகாலம்
மங்கைக்குமஞ்சளரைக்கும்காலம் ஐயா
மானமில்லாதகலிகாலம் ௩
கொண்டபுருடனை திட்டும்காலம் இவள்
கூலிகொடுத்து யழைக்கும்காலம்
முண்டைகள்பிள்ளைபெறுகும்காலம்ஐயா
மோசத்துக்கஞ்சாகலிகாலம்
கட்டினமாது அலையும்கலாம் யிவன்
காவியுடுத்திதிரியும்காலம்
புட்டிபுட்டியாய்குடிக்கும்காலம்ஐபா
புளுகறுக்கேற்ற கலிகாலம் ௫
பொய்யானபத்ர மெழுதும்காலம் சாட்சி
பூட்டியேகோட்டில் ஜெயிக்கும்காலம்
தெய்வப்பொருளைத் திருடும்காலம் இது
தீவினைக்கஞ்சா கலிகாலம் ௬
அருமையரியாமு ரட்டுக்காலம்இது
கர்ம்மியைபோற்றுங் திருட்டுகாலம்
சிறுமணவூர்முனிசாமி சொல்வாக்கியம்
சோதித்துபார்கலிகாலகுணம்

கலியுகச்சிந்து முற்றிற்று.